DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C. No. 128/2017 |
| Deposition of witness | : | PW - 9 |
| Name | : | மணிமாறன் |
| Father's /Husband Name | : | முருகையன் |
| Village | : | குடவாசல் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 56 |
| Occupation | : | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 26th day September 2024. Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.03.2016-ம் தேதி நன்னிலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது சிறப்பு உதவி ஆய்வாளராக நன்னிலம் காவல் நிலைய பொருப்பில் இருந்த வாசுதேவன் என்பவரிடம் கோவிந்தராசு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நன்னிலம் காவல் நிலைய குற்ற எண்.73/2017 சட்டப்பிரிவு 392 இதச வின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது பார்வைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பினை நான் விசாரணைக்ளகு எடுத்துக்கொண்டு கடந்த 19.03.2017-ம் தேதி மாலை 05.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பக்கிரிசாமி, அறிவழகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ. 7** மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் கோவிந்தராசு, பரமேஸ்வரி, நவநீதகிருஷ்ணன், வாஞ்சிநாதன், பக்கிரிசாமி, அறிவழகன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியை தேடி வந்த நிலையில் குடவாசல் காவல் நிலைய வட்ட ஆய்வாளர் அவர்களால் எரவாஞ்சேரி காவல் நிலைய குற்ற எண்.07/2017 சட்டப்பிரிவு 457, 394 இதச வழக்கில் கடந்த 01.05.2017-ல் கடமங்குடி பஸ் ஸ்டாப் அருகே இருந்த

இவ்வழக்கின் எதிரியான கணேசன் என்பவரை சாட்சிகள் ஆனந்தன், முத்துக்குமரன் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நன்னிலம் காவல் நிலைய குற்ற எண்.73/2017 சட்டப்பிரிவு 392 இதச வழக்கில் தொடர்புடைய தாலி 4 கிராம், குண்டு 2 கிராம், காசு 2 கிராம் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலமாக குடவாசல் வட்ட காவல் ஆய்வாளர் கைப்பற்றி இவ்வழக்கின் மேல்நடவடிக்கைக்காக கொடுக்கப்பட்டதை பெற்றுக்கொண்டு இவ்வழக்கின் சம்மந்தப்பட்ட எதிரியானவர் திருச்சி மத்திய சிறையில் எரவாஞ்சேரி காவல் நிலைய குற்ற எண்.07/2017 வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்தவரை சிறப்பு உதவி ஆய்வாளர் தமிழ்வாணன் என்பவர் மூலமாக கடந்த 03.05.2017 ல் உரிய வேண்டுகோளின்படி சம்பிரதாய கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி இவ்வழக்கில் உட்படுத்தப்படுத்தினேன். பின்பு பட்டியல் சாட்சிகள் ஆனந்தன், முத்துக்குமரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் எண்.91–ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து அதற்கு வழக்கு சொத்து எண்.71/2017 என பெற்றேன். அதற்கான படிவம் எண்.91 **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு வழக்கினை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது விசாரணை முடித்து எதிரி மீது குற்ற அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.